ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

e-Newsletter

Vol: 02, No : 02 - February 2012

Tel: +94 115 353635
Fax: +94 115 335500
E-mail: pccsl@pccsl.lk
Website: www.pccsl.lk

# தென் ஆபிரிக்கர்கள் முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறையிட ஆர்வம் காட்டுவதில்லை - பத்திரிகை ஆணையாளர் கவலை



ஜேன் டங்கன்

தென் ஆபிரிக்க பத்திரிகை ஆணைக்குழுவுக்கு அந்நாட்டவர்கள் முறைப்பாடு செய்யாததால் முறைப்பாடுகள் குறைந்து வருவதாக தென் ஆபிரிக்க பத்திரிகை ஆணைக்குழுவின் ஆணை-யாளர் ஜேன் டங்கன் கூறியுள்ளார்.

ஜொஹன்னஸ்போர்க்கை தளமாகக் கொண்ட பிராம் பொன்டீன் நிலையத்தில் கடந்த ஜனவரி 30 2012 இல் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தள்ளார்.

இங்கிலாந்தில் ஒரு இலட்சத்திற்கு 7.8 சத வீதம் என்ற அடிப்படையில் ஊடகங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்படுகின்ற அதே நேரம் தென் ஆபிரிக்காவில் இந்த விகிதம் ஒரு இலட்சத்திற்கு 0.5 வீதம் என்ற அடிப்படையில் வீழ்ச்சியடைந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். அந்நாட்டில் பத்திரிகைப் பேரவையில் ஊடகவியலாளர்கள் அங்கத்துவம் வகிக்கவில்லை. ஆனாலும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் முகாமைத்துவ பதவிகளில் இடம்பெற்றுள்ளனர். ஆனாலம் இந்த அமைப்பிலான போக்கை மாற்றியமைக்க சுய கட்டுப்பாட்டு பெறிமுறையை அடிப்படையாகக் கொண்ட ஊடக ஒழுக்கக்கோவை அறிமுகம் செய்யப்பட வேண்டிய தேவை இருக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியிருப்பதாவது:

எந்தவொரு பேரவையும் ஊடகம் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கியதான சுயாதீன பேரவையாக அமைய வேண்டும். அத்துடன் இந்த பத்திரிகைப் பேரவை ஊடகத்துறைக்கு உதவக்கூடியதாகவும் மக்கள் பல்வேறு விடயங்கள் தொடர்பாக முறைப்பாடுகளைச் செய்யும் போது அவற்றை புலனாய்வு செய்து அவ்விடயம் தொடர்பாக வினாக்களை முன்வைத்து பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைக்கும் வகையில் செயற்பட வேண்டும்.

நிதியிடல் தொடர்பாக அவர் குறிப்பிடுகையில் இந்த ஆணைக்குழுவுக்கு நிதியிடல் குறிக்கோளின் அடிப்படையில் அதாவது பத்திரிகைகளின் விற்பனையை அடிப்படையாக வைத்து நிதி வழங்கள் இடம்பெற வேண்டும். ஆனாலும் பத்திரிகை விற்பனை வீழ்ச்சியடையும் போது பொறுப்புணர்வு அதிகரிக்க வேண்டும். அத்துடன் பத்திரிகைப் பேரவை இத்துறையில் உள்ள சட்டங்களில் திருத்தங்களும் முன்வைக்கப்படுவது அவசியமாகின்றது.

ரொட்ஸ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் இவ்விடயம் தொடர்பாக குறிப்பிடுகையில் - ஒவ்வொரு மனிதனும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டியிருப்பதோடு பத்திரிகைகள் அதற்கு கைகொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அப்பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் லினேட் ஸ்டீன்வல்ட் குறிப்பிடுகையில் பொதுமக்களில் இருந்தும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஊடகங்களால் ஏற்படும் பாதிப்புக்களை மட்டுப்படு த்துவதற்கான ஒழுங்கு விதிகளை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். அத்துடன் ஊடகத்துறை அங்கத்தவர்கள் மற்றும் எல்லாத்துறைகளையும் உள்ளடக்கிய பிரதிநிதிகளைக் கொண்டதாக அமைய வேண்டும்.

பேராசியரிர் அந்தியா ஜேர்மன், இவ்விடயம் தொடர்பாக குறிப்பிடுகையில் “ஆசிரிய பீட தீர்மானங்களின் போது சமூக வெளிப்பாடாக பொதுமக்களின் ஆலோசனைகளும் உள்வாங்கப்பட வேண்டும்” இது பத்திரிகைகள் விடயங்களை வெளிப்படுத்தும் போது மக்களை கருத்து வெளியிட ஊக்கமளிப்பதாக அமையும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

## ‘தயட கிருல’ கண்காட்சியில் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது



கடந்த 2012 பெப்ரவரி 04 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை தயட கிருல கண்காட்சி அநுராதபுரத்தில் நடைபெற்றது. இக்கண்காட்சியின் ஆரம்ப விழாவன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்ட போது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் காட்சிக் கூடத்திற்கும் விஜயம் செய்தார். அந்த சந்தர்ப்பத்தில் இலங்கை பத்தரிகை முறைப்பாட்டு அணைக்குழுவின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகுமார் ரொக்வூட் ஜனாதிபதியிடம் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் 2010 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையைக் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பெண்களுக்கு எதிரான முறைப்பாடுகளில் அதிக கரிசனை

இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்திரிகைத்துறை சார் ஒழுக்கக்கோவையின் பிரிவு 1 குறிப்பிடும் சரியான செய்தி வெளியிடல் என்ற விடயத்திற்கமைவாக குடும்ப பிரச்சினையொன்றுக்கு முகம் கொடுத்துள்ள பெண் ஒருவர் நீதிமன்றில் தெரிவித்ததாக கூறப்படும் விடயம் பத்திரிகையொன்றில் பிரசுரிக்கப்பட்டது தொடர்பான முறைப்பாட்டை அந்த ஆணைக்குழு விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருக்கின்றது.

பிரசுரிக்கப்பட்ட விடயமானது பெண்ணொருவரின் கைதுடன் சம்பந்தப்பட்டதாகும். அவரது மகன் சைப்பிரசில் தங்கி இருந்த போது அங்கு மருத்துவ வசதி இல்லாததால் அவர் மகனை தடைகளை கவனிக்காது இங்கிலாந்திற்கு அழைத்து வந்துள்ளார். ஆனாலும் இச்செய்தி முரண்பாடான முறையில் பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கின்றமை தொடர்பாக அப்பெண் இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளார். அவரது முறைப்பாட்டில் அவர் தமது கணவருக்கும் தனக்கும் இடையில் நிலவிய முரண்பாட்டின் போதும் மற்றும் பிள்ளை விடயம் தொடர்பாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்த விடயங்களை பத்திரிகை பிரசுரித்தமை தொடர்பாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்திய ஆணைக்குழு குறிப்பிட்ட விடயத்தை பிரசுரித்ததில் ஒழுக்கக்கோவை மீறல் இடம்பெறவில்லை என்று தெரிவித்தது. ஆனாலும் ஆணைக்குழு இதுபோன்ற விடயங்களைப் பிரசுரிக்கின்ற போது பத்திரிகை பிழையான தகவல்களை பிரசுரிக்காமல் இருப்பதற்கும் மக்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வதைத் தடுப்பதற்கும் போதுமான கவனம் எடுக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியது.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஸ்டெபன் அபெல் குறிப்பிடுகையில் கூறியதாவது : -

'இவ்விடயம் முன்னைய அறிவித்தல் தொடர்பான முக்கிய தேவையை உணர்த்துகின்றது. விடயத்தை பிரசுரிப்பதற்கு முன்னர் ஊடகவியலாளர் உரிய தரப்பினரின் அனுமதியை அல்லது அவர்களது கருத்தை பெற்றுக்கொள்ளத் தவறுவதாயின் அது பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் ஒழுக்கக்கோவையை மீறும் செயலாகும். அவ்வாறு முயற்சி செய்து உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதவிடத்து, உறுதிசெய்வதற்கு எடுத்த முயற்சிகள் தொடர்பாக அச்செய்தியில் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.'

## இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுக்கக்கோவையில் இரண்டு மாற்றங்கள்

இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் கண்காணிக்கப்படுகின்ற இங்கிலாந்து பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் ஒழுக்கக்கோவையில் சில மாற்றங்களைச் செய்வதற்கு அந்நாட்டின் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இணங்கியுள்ளன.

2012 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து அமுலாகும் வகையில் அறிவிக்கப்பட்ட மாற்றங்கள்
வருமமாறு:-

ஒழுக்கக்கோவையின் முன்னுரையில் இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் வழங்கப்படுகின்ற தீர்வை முழுமையாகவும் முன்னுரிமை வழங்கியும் ஆசிரியர்கள் பிரசுரிக்க வேண்டும் என்ற விடயம் உட்படுத்தப்பட வேண்டும். இந்த மாற்றங்கள் தொடர்பாக பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் ஒழுக்கக்கோவைக் குழு 2012 ஜனவரியில் அறிவித்தது.

- பத்திரிகைகளின் ஆசிரியர்களால் ஒழுக்கக்கோவை மீறப்படும் போது அது தொடர்பாக ஆணைக்குழுவின் முரண்பாட்டுத் தீர்வுக்குழுவால் வழங்கப்படுகின்ற தீர்வானது போதிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு முழுமையாக பிரசுரிக்கப்பட வேண்டும் என்ற விடயம் ஒழுக்கக்கோவையின் முன்னுரையில் உட்படுத்தப்பட வேண்டும்.
- பொது நலனை அடிப்படையாகக் கொண்ட விடயங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட விடயத்தை பிரசுரிக்கும் போது பொது ஆர்வ விதிகள் தேவைப்படுகின்றன. அதன் மூலமே பொதுமக்கள் ஆர்வம் காட்டும் விடயங்களிலும் ஒழுக்கக்கோவை மீறல் இடம்பெறுவதைத் தடுக்க முடியும். இந்த மாற்றங்களை ஊடக கைத்தொழில் த்துறையின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளுக்கமைய இங்கிலாந்தின் ஒழுக்கக் கோவைக்குழுவும் அங்கீகரித்திருக்கின்றது.

இது தொடர்பாக ஒழுக்கக்கோவைக் குழுவின் தலைவரும் டெய்லி மெயில் மற்றும் அசோசியேட்டட் நியுஸ்பேபர்ஸ் நிறுவன ஆசிரியருமான போல் டகர் குறிப்பிடுகையில் "இந்த மாற்றங்களானது பொதுவான நல்ல வெளிப்படையான பண்புகளை காட்டுவதற்கும் ஒழுக்கக்கோவை மீறல்களைத் தடுப்பதற்காகவும் ஆகும். கடந்த வருடம் திருத்தம் தொடர்பான சில புதிய சேர்மானங்களை உள்ளடக்கினோம். இதனால் உண்மைகளை புதைத்து திரிபு படுத்தலை மேற்கொள்வதைத் தடுக்க முடிந்துள்ளது. அதே போன்று புதிய திருத்தமான மத்தியஸ்த தீர்வானது மேலும் இந்த ஊடக சிறப்பை வலியுறுத்துவதாக அமைகின்றது" என்று தெரிவித்துள்ளார்.

பொது ஆர்வ திருத்தத்திற்கமைய விடயத்தை பிரசுரிப்பதில் ஒழுக்கக்கோவையை மீறுவதற்கு முன்னர் அதுபற்றி ஆளமாக சிந்திக்க வேண்டிய கடப்பாட்டை உணர்த்துகின்றது. ஏதாவது தேவையின் நிமித்தம் பொது ஆர்வத்தைத் தூண்டும்விதமான விடயம் ஒன்றைப் பிரசுரிப்பதாயின் அத்தகைய விடயத்தை பிரசுரிக்கும்போது அதில் ஒழுக்கக்கோவை மீறலுக்கான காரணத்தைக் குறிப்பிட வேண்டும். இந்த விடயம் பாதுகாப்பானதாக அமைகின்றது. (நன்றி இ.ப.மு.ஆ.கு)

### ஞாயிறு உதிக்கும் சூரியன்

இங்கிலாந்தின் 'நியுஸ் ஒப் த வர்ல்ட்' பத்திரிகை மூடப்பட்டதன் பின்னர் அதன் ஆசிரியர் ரொபர்ட் மேடாப் புதிதாக 'சன் ஒன் சன்டே' என்ற பெயரில் புதிய பத்திரிகையை ஆரம்பித்துள்ளார். இப்பத்திரிகை 2012 பெப்ரவரி 26 ஆம் திகதி வெளியாகியது.

இப்பத்திரிகையின் முதல் பிரதியே 30 இலட்சம் பிரதிகள் விற்பனை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. புதிய பத்திரிகை இங்கிலாந்தின் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுக்க விதிமுறைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் அமைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இதன் முதல் பிரதியை அவுஸ்திரேலியாவின் 80 வயது நிரம்பிய மூத்த ஊடக விற்பன்னர் மேற்பார்வை செய்துள்ளார்.

# ஒழுக்கக்கோவையின் தொடர்ச்சி ...

## 7 இரகசியத்தன்மை




7.1 தனி நபர்களின் ஏகாந்தம் மற்றும் குடும்ப வாழ்க்கை அவர்களின் வீட்டு விவகாரங்கள், உடல் நலன் மற்றும் கடிதப் போக்குவரத்துக்கள் ஆகியவற்றை மதிப்பதில் ஊடகம் குறிப்பாகக் கவனஞ் செலுத்த வேண்டும். பொது நலன் மிகைக்கும் போது மாத்திரமே சம்மதம் இன்றி இத்தகைய ஏகாந்தமான விடயங்களில் தலையிடுவதை நியாயமெனக் கொள்ளலாம்.

7.2 பொது நலனுக்காகவன்றி தனியார் அல்லது பிரசித்த இடங்களில் நியாயமாக ஏகாந்தத்தை எதிர்பார்க்க அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதவை தவிர்த்து சம்மதம் இன்றி மனிதர்களைப் புகைப்படம் எடுப்பதற்காக தொலை நோக்கு (பெருப்பிக்கும்) கண்ணாடிகளை (லென்ஸ்) களை அல்லது புகைப்படக் கருவிகளைப் பாவித்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

7.3 துக்கம் அல்லது அதிர்ச்சி சம்பந்தப்பட்ட விடயங்களில் விசாரணைகள் அல்லது தலையிடுவதை உணர்வுடனும் விவேகத்துடனும் மேற்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

7.4 இளம் வயதினர் தம் பாடசாலைப் பருவத்தை அநாவசியமான தலையீடு இன்றிப் பூரணப்படுத்தும் சுதந்திரத்தைக் கொண்டிருதல் வேண்டும். ஒரு பிள்ளையின் ஏகாந்த வாழ்க்கையைப் பற்றி அச்சிறுவனின் அல்லது அச்சிறுமியின் குடும்பம் அல்லது பாதுகாவலரின் பிரபல்யம்இ கெட்ட பெயர் அல்லது பதவி ஆகியவற்றைக் கவனியாது அலாதியானதொரு பொது நலன் இருந்தால் மாத்திரமே செய்தியைப் பிரசுரித்தல் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

7.5 பொது நலனுக்காகவன்றி வைத்தியசாலைகள் அல்லது அத்தகைய நிறுவனங்களில் உள்ளவர்கள் பற்றி மேற்கொள்ளப்படும் விசாரணைகள் ஏகாந்தத்தில் தலையிடுவது பற்றிய இக்கட்டுப்பாடுகளுடன் குறிப்பாக இணையானவையாகும்.

## ஐரோப்பிய கூட்டமைப்பின் சுயாதீன பத்திரிகைப் பேரவைகள் பற்றிய தகவல்கள்

பத்திரிகைப் பேரவை (அல்லது ஊடக கவுன்சில்) பொதுவாக இரண்டு முக்கிய பணிகளை நிறைவேற்றக் கூடியதாகும்.

இணங்கப்பட்ட பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவையைக் கண்காணித்து நிர்வகிப்பதும் அதனை மீறும் வகையில் செய்யப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதும் முதலாவது பொறுப்பாகும். இரண்டாவது பொறுப்பாக அமைவது பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகும். சில பத்திரிகைப் பேரவைகள் முதலாவதை மட்டுமே நிறைவேற்றுவதை கடமை என்று கருதுகின்றன. ஆனாலும் நடுநிலையாக பொதுமக்களுக்கும் பத்திரிகைகளுக்கும் இடையில் ஏற்படும் பிணக்குகளை நடுநிலையாக நோக்கி தீர்த்து வைப்பதோடு பத்தரிகைச் சதந்திரத்தைப் பாதுகாப்பதே முக்கிய பொறுப்பாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
அத்துடன் பத்திரிகைப் பேரவைகள் பொதுவாக சுயாதீனமான அமைப்பில் ஏற்படுத்தப்பட்டதாக அமைவதோடு பொது மக்களின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெறும் வகையில் சுயாதீனமாக செயல்படும் பேரவை என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வெளிநாடுகளில் பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவையானது ஊடகவியலாளர்களின் தராதரத்தை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டிருப்பதோடு பத்திரிகைகள் தவறான அடிப்படையிலும் பிழையான அல்லது உண்மைக்கு புறம்பானதாக விடயங்களைப் பிரசுரிக்கும்போது அதற்கு எதிராக பொதுமக்கள் முறைப்பாடு செய்வதற்கு முடியுமான அடிப்படையில் உருவாக்கப் பட்டிருக்கின்றது. சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைவாக ஒழுக்கநெறி விதிமுறைகளை உள்ளடக்கியதாக ஒழுக்கக்கோவை வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.
பத்திரிகைப் பேரவை கூட்டு ஒத்துழைப்புடன் சட்ட உதவி எதுவும் இல்லாத அடிப்படையில் இலவச சேவையை வழங்கி வருவதோடு பத்திரிகைத்துறையின் தராதரத்தை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு இயங்குவதாகும்.

### அங்கத்துவ நாடுகள்

| | |
|---|---|
| அர்மேனியா | லக்ஷம்பர்க் |
| அசர்பைசான் | மோல்டா |
| பெல்ஜியம் (F) | மோல்டொவா |
| பெல்ஜியம் (W) | மொன்டிநீக்ரோ |
| பொஸ்னியா | நெதர்லாந்து |
| பொஸ்வானா | நியுசிலாந்து |
| பல்கேரியா | நோர்வே |
| சைப்பிரஸ் | பெரு |
| டென்மார்க் | ருஷ்யா |
| எஸ்டோனியா | ஸ்பெய்ன் |
| பின்லாந்து | இலங்கை |
| பிரான்ஸ் | சுவீடன் |
| ஜேர்மனி | சுவிட்சர்லாந்து |
| ஹங்கேரி | தாய்லாந்து |
| அயர்லாந்து | இங்கிலாந்து |
| இஸ்ரேல் | உக்ரேன் |
| இத்தாலி | ஐக்கிய அமெரிக்கா |
| கொசோவோ | |

# இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஸ்டெபன் அபெல் பதவி விலகினார்

இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஸ்டெபன் அபெல் வகித்த பதவியில் இருந்து இராஜிநாமாச் செய்துள்ளார். தற்போது அவர் இங்கிலாந்தின் முக்கிய ஊடக நிறுவனமான பெகபீல்ட் கொமியுனிகேசன் என்ற ஊடக மையத்தில் ஊடக ஆலோசகராக புதிய பதவியொன்றை ஏற்றிருப்பதால் முன்னைய பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அந்த வெற்றிடத்தை நிரப்பும் வகையில் இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு ஹன்ட் பிரபு நியமிக்கப்பட்டுள்ளார். அவர் அதுபற்றி குறிப்பிடுகையில் "நான் இந்த ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட பின்னர் ஸ்டெபனுடன் இணைந்து பத்திரிகைத்துறைக்கு சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை தொடர்பாக ஆக்க பூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள இணங்கினேன். அவருடைய வழிகாட்டல்களையும் உதவிகளையும் நான் மிகவும் மெச்சுகின்றேன். பொது மக்கள் பார்வையிலும் வெளிப்படையாகவும் கடந்த சில வருடங்களாக இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விரிவு படுத்துவதிலும் திரம்பட முன்னெடுப்பதிலும் முக்கியமாக பங்காற்றியுள்ளார்.

ஆணைக்குழு மைக்கல் மக்மெனஸ் என்பவரை ஆணைக்குழுவின் பணிப்பாளர் பதவிக்கு அமர்த்தியது. அவர் அரசியல் மற்றும் ஊடகவியல் தொடர்பான பரந்த அறிவுடையவராவார். பத்திரிகைத்துறையில் தொடர்ச்சியாக சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவைப் பொறிமுறையை முன்னெடுப்பதிலும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை திரம்பட மேற்கொள்வதிலும் பங்காற்றவுள்ளார். இந்த ஆணைக்குழு இலவசமாக சேவையை வழங்குவதன் ஊடாக சேவையை நாடும் மக்களுக்கு பங்காற்றுவதே முக்கிய இலக்காக அமைகின்றது.

ஸ்டெபன் அபே கூறியதாவது :
இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் இணைந்து பணியாற்றக் கிடைத்தமை ஒரு வரப்பிரசாதமாக கருதுகின்றேன். இங்கு சிறந்த அனுபவத்தைப் பெற்றேன். இங்கிலாந்தின் ஒட்டு மொத்த பத்திரிகைத்துறையோடு சம்பந்தப்பட்ட ஒரு இடத்தில் கடமை புரிந்தமை வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவமாகும்.

பத்திரிகைகள் சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவைப் பொறிமுறையை பின்பற்றி அமுலாக்கம் செய்வதில் முழு அளவில் பங்களிப்புச் செய்ய வேண்டும். சட்டங்களால் ஊடகங்களைக் கட்டுப்படுத்தி விலங்கிடும் நிலைமைகளில் இருந்தும் ஊடக சுதந்திரத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தலையும் தவிர்த்து பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள சிறந்த வழிமுறை இதுவாகும். பத்திரிகைளால் பாதிக்கப்படும் பெதுமக்களுக்கு 24 மணித்தியாளங்களும் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு வசதியை ஏற்படுத்தியமை நான் எடுத்த நடவடிக்கைகளில் முக்கியமானதாகும். இதன் ஊடாக பத்திரிகைப் பிரசுரங்களால் பாதிக்கப்படும், மன உளைச்சலுக்குட்படும், தவறான பிரசுரங்களால் மானசீக பாதிப்புக்களுக்கள்ளாகும் அல்லது அவமானத்திற்கு உள்ளாகும் பொதுமக்களுக்கு நியாயத்தை வழங்கவும் இத்தகைய நிலைமைகள் தொடர்வதைக் கட்டுப்படுத்தவும் முடிந்திருக்கின்றது. இத்தகைய இலவச சேவையைக் கொண்ட பத்திரிகை முறைப்பாட்டு அணைக்குழுவின் பணி தொடர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மைக்கல் மக்மெனஸ் கூறுகையில்:-
நான் இந்த ஆணைக்குழுவில் இணைந்து சேவையாற்ற முடிந்ததை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். பத்திரிகைத்துறையில் சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவையை அமுல்படுத்தி சிறப்பான பத்திரிகைத்துறையை கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற பணியைத் தொடர எனது முழு அனுபவத்தையும் பயன்படுத்த திடசங்கட்பம் பூண்டுள்ளேன். இதை ஒரு முக்கிய சவாலகவும் கருதுகின்றேன்.

இ.ப.மு.ஆ.கு.வின் பணிப்பாளர் சபை
இ.ப.மு.ஆ.கு.வின் செயலகம்

---

### இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தற்போதைய பணிப்பாளர் சபை

சிவகுமார் நடேசன் (தலைவர்) ஏனைய உறுப்பினர்கள் வருமாறு: நிமல் வெல்கம, சிங்ஹ ரட்னதுங்க, மனிக் த சில்வா, என்.எம்.அமீன், சுந்தர நிஹதமானி த மெல், சிறி ரணசிங்க, சுனில் ஜயசேகர

### இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயலகம்

சுகுமார் ரொக்வூட் – பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி, கமல் லியனாரச்சி - சிங்கள மொழி மூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி, எம்.எஸ். அமீன் ஹுசைன் - தமிழ் மொழிமூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி